
# இல்லத்து வன்செயல்களை தடுப்பதற்குரிய சட்டம் என்பது என்ன?



இது ஒரு பெண்கள் செயலணியின் வெளியீடு

எழுதியவர்:
சட்டத்தரணி ஷியாமிலா தளுவத்த

பக்க அமைப்பும் ஓவியமும்:
தமயந்தி முதுகுமாரகே

பதிப்பாளர்:


தேசிய பெண்கள் குழு
சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு
3வது மாடி, செத்சிரிபாய - IIம் கட்டம், பத்தரமுல்ல
தொலைபேசி: 011-2186063
மின்னஞ்சல்: secncwsl@gmail.com


2 – CM 017491

மீள் பதிப்பு - 2014

3,000 (2014/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

# முகவுரை

பெண்களைக் கொடுமைப்படுத்தல் என்பது பெண்களின் அடிப்படை உரிமைகள் மீறலாகும். சமூகத்தின் அதிகாரம் ஆண்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டு அதன்மூலம் பெண்கள் பலவீனப்படுத்தப்பட்டுள்ளனர். வீட்டில் நடைபெறும் கொடுமைகள் உட்பட பெண்களுக்கு எதிராக நடைபெறும் கொடுஞ் செயல்கள் பெண்களின் இப்பலவீன நிலையை பயன்படுத்தியே நடைபெறுகின்றன.

இல்லத்து வன்செயல்களை தடுப்பதற்குரிய சட்டம், ஏறக்குறைய பத்து ஆண்டுகளாக பெண்கள் அமைப்புக்கள் மேற்கொண்ட போராட்டத்தின் வெற்றிகரமான பெறுபேறாகும். இலங்கையில் பெண்கள் வலுப்படுதலை அளக்கக் கூடிய, ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச அளவீடு இதுவாகும்.

இச்சட்டமூலம் சட்டமாக்கப்பட்டதன் வாயிலாக மாத்திரம் இல்லத்து வன்செயல்களை குறைக்க இயலாது. இவ்வாறான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதென மக்கள், பெண்கள் ஆகியோர்களைப் போன்றே சட்டத்தை நிறைவேற்றும் நிறுவனங்கள், ஊடகங்கள், மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்கள் ஆகியவைகளும் அறிந்திருத்தல் வேண்டும். இச்சட்டத்தை நிறைவேற்ற இவ்வமைப்புக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள கடமைகள் பல. இக்கடமைகளையும் நிறுவனங்களையும் ஒன்றிணைத்து, வேலைத்திட்டங்கள் தயாரித்து, இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயற்பாட்டை தேசிய பெண்கள் செயலணி ஏற்றுள்ளது. அதன்படி தேசிய பெண்கள் செயலணி, இல்லத்து வன்செயல்களை தடுக்கும் சட்டத்தை செயற்படுத்துவதற்காக உரிய நிறுவனங்களுடன் இணைந்து ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை தயாரித்துள்ளது.

தேசிய பெண்கள் செயலணியின் முக்கிய கடமையாக, பெண்கள் பிரகடனத்தின் செயற்பாட்டை வழிநடத்த வேண்டியுள்ளதோடு, அதில் பெண்களுக்கு எதிரான வன்செயல்களிலிருந்து அவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமைகள் பற்றியும் எடுத்துக்

இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.



கூறப்படுகிறது. அதன்படி தேசிய பெண்கள் செயலணியின் செயற்திட்டத்தில் பிரதான இடத்தை வகிக்கும் இல்லத்து வன்செயல்களை தடுக்கும் தந்திரோபாயங்கள், நடவடிக்கைகள் ஆகியவைகளை உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்செயல்களை நீக்கக் கூடிய இக் கையேடு, இதற்கான சேவைகளை வழங்கும் சேவை வழங்குனர்களின் பிரயோசனத்தை கருதி தயாரிக்கப்பட்டுள்ளது. பொலிஸ், சட்டமன்றங்கள், நன்னடத்தை திணைக்களம் ஆகியவைகள் உட்பட உரிய நிறுவனங்களின் அதிகாரிகளின் தேவைகளுக்கும் மற்றும் பயிற்றுவிப்பாளர்களின் கையேடாகவும் இதை பாவிக்கலாம்.

இப் புத்தகத்தை மிகவும் குறுகிய காலத்தில் தெளிவான மொழியில் எழுதிய செல்வி ஷியாமிலா தளுவத்த அவர்களுக்கும், பக்கவடிவமைப்பு மற்றும் படங்கள் வரைந்து உதவிய திருமதி தமயந்தி முதுகுமாரகே அவர்களுக்கும் தேசிய பெண்கள் செயலணி நன்றி கூறுகிறது.


சுவர்ணா சுமணசேகர
தலைவர்
தேசிய பெண்கள் செயலணி
2005 - அக்டோபர் மாதம் 26ம் திகதி

இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.



இல்லத்து வன்செயல்களை தடுக்கும் சட்டம் இலங்கை நீதிச் சரித்திரத்தில் ஒரு விசேட மைல் கல்லாகும்.

இல்லத்து வன்செயல்களை தடுக்கும் சட்டம் இலங்கை நீதிச் சரித்திரத்தில் ஒரு விசேட மைல் கல்லாகும். நீண்ட காலமாக பெண்கள் அமைப்புக்கள், மனித உரிமை நடவடிக்கையாளர்கள் ஆகியோர்களினால் மேற்கோள்ளப்பட்ட வேண்டுகோள்கள் மற்றும் தொடர் முயற்சி ஆகியவைகளின் பிரதிபலனாக இது 2005 - ஆகஸ்ட் மாதம் 09ம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்காக நீதி அமைச்சு, பெண்கள் அபிவிருத்தி, சமூக நலன்புரி அமைச்சு மற்றும் தேசிய பெண்கள் செயலணி ஆகியவைகள் அரசின் சார்ப்பாக முக்கிய பாத்திரங்களை வகித்து செயற்பட்டன.



## இல்லத்து வன்செயல்கள் என்பது என்ன?

துன்புறுத்தலுக்கு ஆளாகும் நபர் மற்றும் துன்புறுத்துபவர் ஆகிய இருவருக்குமிடையில் உள்ள தனிப்பட்ட ரீதியான தொடர்பின் பெறுபேறாக யாராவது ஒருவரை, உடல் ரீதியாக அல்லது உள ரீதியாக துன்புறுத்தல் இல்லத்து வன்செயலெனக் கருதப்படும். இத்துன்புறுத்தல் வீட்டுச் சூழலிலேயே நடைபெற வேண்டுமென்பது அவசியமல்ல. ஆனால் இது வீட்டிற்கு வெளியிலும் நடைபெறலாம்.



இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.

உடல் ரீதியான துன்புறுத்தல் என்பது என்ன?

துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படும் நபரின் உடலை இலக்காகக் கொண்டு நடைபெறும் பின்வரும் செயற்பாடுகள் இவைகளுக்கு உரியவைகளாகும்.



1.

குற்றவியல் சட்டத்தின் 16வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உடல் சம்பந்தமான குற்றங்கள்

அதாவது இல்லத்து வன்செயல் ஒன்றின் மூலம் குற்றவியல் சட்டத்தில் உள்ளவாறு கீழ் காட்டப்பட்டுள்ள சில குற்றங்களை உறுதிப்படுத்தக் கூடிய ஏதாவதொரு செயலொன்றை செய்திருந்தால்,

304ம் பிரிவு - பெண்ணின் விருப்பமின்றி கருக்கலைப்பு செய்தல்.

உதாரணம்

293ம் பிரிவு - தீய எண்ணத்துடன் செய்யும் படுகொலை
294ம் பிரிவு - கொலை
299ம் பிரிவு - தற்கொலைக்கு உதவியளித்தல்.
300ம் பரிவு - கொலை செய்வதற்கு முயற்சித்தல்.
303ம் பிரிவு - கருக்கலைப்பு செய்தல்.
305ம் பிரிவு - கருக்கலைப்பு செய்யும் நோக்குடன் செய்யும் செயலலொன்றின் மூலம் மரணத்தை ஏற்படுத்தல்.
308ம் பிரிவு - 12 வயதுக்கு குறைந்த குழந்தையொன்றை பெற்றோர் அல்லது பொறுப்பேற்றுள்ள நபர் கைவிடுதல் அல்லது வெளியேற்றுதல்.







308 ஆ பிரிவு - பிள்ளைகளை கொடுமைப்படுத்தல்.

310ம் பிரிவு - காயமேற்படுத்துதல்.

311ம் பிரிவு - ஆழ்ந்த காயங்களை ஏற்படுத்துதல்.

330ம் பிரிவு - நியாயமற்ற இடைஞ்சல்

331ம் பிரிவு - நியாயமற்ற முறையில் சிறைப்படுத்தல்.



340ம் பிரிவு - பலாத்காரம்

341ம் பிரிவு - குற்ற ரீதியான பலாத்காரம்.

342ம் பிரிவு - தொந்தரவு செய்தல்.

345ம் பிரிவு - பாலியல் வன்முறை

350ம் பிரிவு - கடத்திச் செல்லுதல்.

351ம் பிரிவு - கடத்துதல்.

360 அ பிரிவு - ஆட்கடத்தல்.

360 ஆ பிரிவு - பிள்ளைகளிடமிருந்து நியாயமற்ற பாலியல் ரீதியான பயன்பெறுதல்.

360 இ பிரிவு - ஆட்களை விற்பனை செய்தல்.


362 அ பிரிவு - விவாகம் செய்வதாக ஏமாற்றி யாராவது ஒருவருடன் உடலுறவு கொள்ளுதல்.

363ம் பிரிவு - வன்புணர்ச்சி

364ம் பிரிவு - விபச்சாரம்

365ம் பிரிவு - இயற்கைக்கு மாறான குற்றங்கள்.

365 அ பிரிவு - பாரிய பாலியல் குற்றங்கள்.



## 2. குற்றவியல் சட்டத்தின் 483ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள பயமுறுத்தல் குற்றங்கள்.

யாராது ஒருவருடைய சொத்துக்களுக்கு அல்லது உடலுக்கு நட்டமொன்றை ஏற்படுத்துவதாக, நற்பெயருக்கு தீங்கொன்று இழைப்பதாக பயமுறுத்தி, துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படும் நபர் செய்ய வேண்டிய ஏதாவதொன்றை செய்யாமல் விடுவதற்கு அல்லது செய்யக் கூடாததொன்றை செய்ய வைப்பதன் மூலம் இக்குற்றம் நடைபெறுகிறது.

உதா: வீட்டிற்கு தீ வைப்பதாக பயமுறுத்தி தான் ஒருபோதும் உரிமையளிக்க நினைத்திராத காணி உறுதியொன்றுக்கு கையொப்பம் இடுமாறு மகன் ஒருவரால் தகப்பனுக்கு பயமுறுத்தல் விடுப்பதன் மூலம் தந்தை சொத்துக்களை உரிமையளிக்க கையொப்பமிடல்.



## 3. குற்றவியல் சட்டத்தின் 372ம் பிரிவின் கீழ் பலாத்காரமாகப் பெற்றுக்கொள்ளல்.

அதாவது ஒரு நபருக்கு நட்டம் ஏற்படுத்துவதாக பயமுறுத்தி ஏதாவது சொத்தொன்றை அல்லது ஏதாவதொன்றை பெற்றுக் கொள்ள துன்புறுத்தலுக்கு ஆளான நபரின் மீது பலாத்காரத்தை பிரயோகித்தல் என்பது இதன் கருத்தாகும். உதா: விவாகரத்து செய்வதாகப் பயமுறுத்தி தன்னுடைய சொத்துக்களை உரிமையளிக்கக் கூறி துன்புறுத்தலுக்கு ஆளான நபரைத் தூண்டினால் அவ்வாறு துன்புறுத்தும் நபர் இக்குற்றத்தைச் செய்கிறார். இது பலாத்காரத்தை பிரயோகித்து பெற்றுக் கொள்வதாகும்.







## உளரீதியாக துன்புறுத்தல் என்பது என்ன?


வீட்டில் நடைபெறும் துன்புறுத்தல்கள் என்பது உடல்ரீதியாக நடைபெறும் துன்புறுத்துதல்கள் மாத்திரமல்லாது, உளரீதியாக துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுதலும் இதில் அடங்கும். சட்டத்தில் காட்டியுள்ளவாறு மனதை புண்படுத்தும் வகையில் ஏசுதல் என்பது இந்த உளரீதியான துன்புறுத்தலுக்குள் அடங்குகின்றது. ஒருவரை துன்புறுத்தலுக்கு ஆளாக்கக் கூடிய முறைகள் பல. இவைகள் சொற் பிரயோகத்தைப் போன்றே செயலிலும் அடங்கலாம். யாராவது ஒருவரை துன்புறுத்தலுக்குள்ளாக்கி மிகவும் மோசமான நிலையில் பழித்துரைத்தல் அல்லது இழிவுபடுத்துதல் இதிலடங்கும். மோசமான வார்த்தைகளால் ஏசுதலும் பழித்துரைத்தல் ஆகும். இங்கு ஏதாவது ஒரு வகையில் ஏசுதல் அல்லது உடல் ரீதியான துன்புறுத்தல் ஒன்றை மேற்கொள்ளாமல் ஒருவருக்கு திடீரென துன்பமொன்றை ஏற்படுத்தும் செயலொன்றை செய்வதன் மூலம் அந்நபரை மோசமான வேதனைக்கு உட்படுத்த முடியுமாவதோடு, அவ்வாறான செயல்களும் இதனுள் அடங்கும்.



உதா: கணவன், மனைவிக்கு அறிவிக்காமல் சொத்துக்களை விற்பனை செய்தல் அல்லது வீட்டிலிருந்து வெளியேற்றுதல்.

## வீட்டில் நடைபெறும் வன்செயல்களை தடுப்பதற்கு எந்த நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்ய முடியும்?

மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில்







இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.

இங்கு நீதிமன்ற அதிகார பிரதேச எல்லையை தீர்மானிக்கும் போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் ஏதாவதொன்றில் வழக்கு தாக்கல் செய்ய முடியும்.

- துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்ட நபரின் தற்காலிக அல்லது நிரந்தர வதிவிடங்களில் உள்ள மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்
- துன்புறுத்தல் செய்யும் பிரதிவாதியின் தற்காலிக அல்லது நிரந்தர வதிவிடத்திலுள்ள மாஜிஸ்டிரேட் நீதிமன்றம்.



- இல்லத்து வன்செயல்கள் நடைபெறும் அல்லது நடைபெறப் போகும் அல்லது நடைபெற்ற இடத்து நீதிமன்ற வலயத்து மாஜிஸ்டிரேட் நீதிமன்றம்.

## இல்லத்து வன்செயல்களைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் நீதிமன்றம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய நிவாரணங்கள் யாவை?

துன்புறுத்தும் நபரினால் இழைக்கப்படும் இல்லத்து வன்செயல்களை தடுப்பதற்காக பாதுகாப்பு கட்டளை ஒன்றை பெற்றுத் தருமாறு கோரி விண்ணப்பிக்கலாம். அவ்வாறே பாதுகாப்புக் கட்டளையின் கீழ் துன்புறுத்தலுக்கு ஆளான நபரின் பாதுகாப்பை உறுதி செய்யக் கூடியவாறு கட்டளையொன்றை பிறப்பிக்க முடியுமாவதோடு, இதற்கு மேலதிகமாக துன்புறுத்தலுக்கு ஆளானவரின் உடல்நலம் மற்றும் நலன்களுக்குரிய கட்டளைகளையும் பிறப்பிக்க முடியும்.



இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.




இல்லத்து வன்செயல்களைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு கட்டளையொன்றுக்காக விண்ணப்பிக்கக் கூடிய தகுதியுள்ளவர்கள் யார்?

துன்புறுத்தலுக்கு ஆளானவர் முதியவர் என்றால்,

- துன்புறுத்தலுக்கு ஆளானவரினால்,
- பொலிஸ் அதிகாரி ஒருவரினால்

துன்புறுத்தலுக்கு ஆளானவர் பிள்ளை ஒன்றாயின்,



- பிள்ளையின் பெற்றோர்களில் ஒருவரினால்
- பாதுகாவலர் ஒருவரினால்
- பிள்ளை வதியுமிடத்தில் வாழும் ஒருவரினால்
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் (எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நபரினால். இது 1998ம் ஆண்டு 50ம் இலக்கத்தை கொண்ட சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.)
- பொலிஸ் அதிகாரி ஒருவரினால்

இல்லத்து வன்செயல்களை தடுக்கும் சட்டத்தின் கீழ் துன்புறுத்தலுக்கு ஆளானவருக்கான பாதுகாப்புக் கட்டளையொன்றை வேண்டி நிற்பதற்கு அரச சார்பற்ற நிறுவனத்திற்கு அல்லது தொண்டர் அமைப்பொன்றுக்கு இயலுமா?

**இயலாது**

எவ்வாறாயினும், அவ்வமைப்பு துன்புறுத்தலுக்கு ஆளானவருக்கு சட்ட மற்றும் வேறு உதவிகளை வழங்க முடியும்.

## துன்புறுத்தலுக்கு ஆளாகும் ஒருவர் இல்லத்து வன்செயல்களை தடுக்கும் சட்டத்தின் கீழ் எவ்வாறான நபர்களுக்கு எதிராக நிவாரணம் கோரலாம்?

இச்சட்டத்திற்கு பொருந்துபவராக இருப்பதற்கு ஆண், பெண் வித்தியாசம் கிடையாது. வயதெல்லை கிடையாது. திருமணம் செய்தவர், செய்யாதவர் எனும் வித்தியாசம் கிடையாது. இதன் கீழ் விபரிக்கப்படும் உறவு முறைகளுக்குரிய நபர்கள் அவ்வுறவு முறையை பாவித்து ஒரு கட்சிக்காரர் மற்றைய கட்சிகாரருக்கு இல்லத்து வன்செயல்களை செய்வாராயின் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியும்.



- கணவன் அல்லது மனைவிக்கு
- முன்னைய விவாக மனைவிக்கு அல்லது கணவனுக்கு
- தன்னுடன் ஒன்றாக வாழும் ஒருவருக்கு அல்லது ஒருத்திக்கு
- துன்புறுத்தலுக்கு ஆளான நபருடைய அல்லது திருமணம் செய்துள்ள கணவன் அல்லது மனைவியுடைய, முன்னைய விவாக கணவன் அல்லது மனைவியுடைய அல்லது தன்னுடன் உடலுறவில் ஈடுபடும் ஒருவருடைய உறவுகளினால் ஏற்படக்கூடிய பின்வரும் உறவுகளைக கொண்டவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல செய்ய முடியும்.

- தகப்பன், தாய், தாத்தா, பாட்டி, சிறிய தாய், சிறிய தந்தை
- மகன், மகள், பேரன், பேத்தி, பெறாமகன், பெறாமகள்
- சகோதரன், சகோதரி, அரைச்சகோதரன், அரைச்சகோதரி, வளர்ப்புச் சகோதரன், வளர்ப்புச்சகோதரி
- பெற்றோர்களின் சகோதரர்கள் (உதா: மாமி, சிற்றப்பா, மாமா)
- சகோதரனின் அல்லது சகோதரியின் பிள்ளை
- பெற்றோர்களின் சகோதரனுடைய அல்லது சகோதரியுடைய பிள்ளை (உறவுச்சகோதரன்)

பாதுகாப்புக் கட்டளையொன்றை பெற்றுக்கொள்வதற்கான மனுவை விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் இல்லத்து வன்செயலொன்று, நடைப்பெற்றிருக்க வேண்டியது அத்தியாவசியமா?

இல்லை. துன்புறுத்தலுக்கு ஆளான நபருக்கு எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய இல்லத்து வன்செயல்களை தடுப்பதற்காக வழக்கு மன்றத்திலிருந்து பாதுகாப்புக் கட்டளையொன்றை கோரி நிற்க முடியும். உதா: மரணத்தை ஏற்படுத்துவதாக பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு இக்கட்டளையை கோர முடியும்.

அதாவது

வீட்டு வன்செயலொன்று நடைபெற்றுள்ள சந்தர்ப்பத்தில் (கடந்த காலத்தில்)
நடைபெற்றுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் (நிகழ் காலத்தில்) நடை பெறுவதற்குரிய அண்மிய சந்தர்ப்பமொன்றில (எதிர் காலத்தில்)
ஆகிய மூன்று சந்தர்ப்பங்களிலும் இந்த பாதுகாப்பு கட்டளையை கோரி நிற்க முடியும.




இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.

இவ்வாறான வழக்கொன்றை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் கோவையிடுவதற்கு எத்தனை வழக்குப் பிரதிகள் தேவைப்படும்?

இரண்டு

பாதுகாப்பு கட்டளையொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு பொலீஸில் முறைப்பாடொன்று செய்ய வேண்டியது அவசியமா?



இல்லை

இருப்பினும், துன்புறுத்தலுக்கு ஆளான கட்சிக்காரர் விரும்பினால் முறைபாடொன்றை செய்ய முடியும்.

இல்லத்து வன்செயல்களை தடுப்பதற்குரிய மனுவில் அடங்க வேண்டிய விடயங்கள் என்ன?

சட்டத்தின் 2வது உப அட்டவணையில் காட்டியுள்ளவாறு

1 துன்புறுத்தலுக்கு ஆளாகியவரின் பெயர், முகவரி
2 துன்புறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பிரதிவாதியின் பெயர், முகவரி
3 வழக்கின் சம்பவங்கள் தொடர்பான விடயங்கள்
4 நடைபெற்ற, நடைபெறக் கூடிய இல்லத்து வன்செயல்கள் பற்றி தெரிந்த நபர் ஒருவரினால் பெற்றுத் தரப்படும் சத்தியக் கடதாசி (Affidavit) (இது கட்டாயமன்று)
5 வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அனுமதிச்சீட்டு, பொலிஸுக்கு சமர்பிக்கப்பட்ட வாக்குமூலம் ஆகியவைகள் இருந்தால் இணைக்கவும்(இவைகள் கட்டாயமன்று.)



இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.

## மனுவின் மாதிரி



கல்கிஸை மாஜிஸ்டிரேட் நீதிமன்றில்
சாந்தி குசுமலதா
இல.22, வெவ ரவும பார.
மஹரகம
துன்புறுத்தலுக்கு ஆளானவர்

எதிராக,
காமினி கல்ஹேன,
இல.22, வெவ ரவும பார,
மஹரகம
பிரதிவாதி

2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ம் திகதி தன்னுடைய சட்டத்தரணி கல்யாணி அலஹக்கோன் மூலம் ஆஜராகும் மேற்குறிப்பிட்ட பெயரையுடைய துன்புறுத்தலுக்கு ஆளானவர் தனது முறைப்பாட்டில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

1. மேற்குறிப்பிட்ட பெயரையுடைய துன்புறுத்தலுக்கு ஆளானவர் மேற்குறிப்பிட்ட பெயரையுடைய பிரதிவாதியின் விவாக மனைவியாவார்.

2. இவர்கள் இருவரும் பெற்றோரின் ஆசீர்வாதத்துடன் 2004ம் ஆண்டு ஆகஸ்ட் 4ம் திகதி திருமணம் செய்து கொண்டதோடு, அத்திருமணத்தின் மூலம் பெற்றுக்கொண்ட நதீஸா நில்மினி எனும் 03 வயதைக் கொண்ட பிள்ளையொன்று இருக்கிறார்.

3. இப்பிரதிவாதி மனுதாரரின் பெற்றோர்களின் சொத்துக்களை தனது பெயருக்கு எழுதித் தரும்படி பயமுறுத்துவதுடன், அடிக்கடி சண்டையிட ஆரம்பித்தார் என துன்புறுத்தலுக்கு ஆளானவர் கூறுகிறார்.


4. இம் மனுவிற்கு 2மாதத்திற்கு முன்பிலிருந்தே, பிரதிவாதி குடிபோதையில் வீடு வருவதாகவும், தனக்கு மோசமான வார்த்தைகளினால் ஏசுவதுடன் துன்புறுத்துவதாகவும், இக்காரணங்களினால் தானும், பிள்ளையும் பயந்து சத்தமிடுவதாகவும், அது பிள்ளையின் உள மற்றும் உடல் நலத்திற்கு ஊறு விளைப்பதாகவும் துன்புறுத்தலுக்கு ஆளானவர் கூறுகிறார்.

5. விடயங்கள் இவ்வாறு இருக்க, 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி பிரதிவாதி துன்புறுத்தலுக்கு ஆளான பெண்ணின் தலைக்கு மேற்கொண்ட தாக்குதலினால் பலத்த காயமேற்பட்டதாகவும், அதனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதாகவும் கூறுகிறார்.

6. இவ் விடயங்களை கருத்திற்கொண்டு, துன்புறுத்தலுக்கு ஆளான பெண், தனது பாதுகாப்பு கருதி, 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதிவாதிக்கு எதிராக பாதுகாப்பு கட்டளையொன்றை பிறப்பிக்குமாறு கௌரவ நீதிமன்றத்திடம் துன்புறுத்தலுக்கு ஆளான பெண் மனுச் செய்கிறார்.

ஒப்பம்
துன்புறுத்தலுக்கு ஆளானவர்

இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.



## (1) வழக்கொன்றை நீதிமன்றில் கோவையிட்டதன் பின்னர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்ன?

1 துன்புறுத்தலுக்கு ஆளானவருக்காக கோவையிடப்பட்ட மனு மற்றும் சத்தியக் கடதாசி ***(Affidavit)*** இருப்பின் அவைகளை நீதிமன்றம் மிக விரைவாக கவனத்திற் கொள்ள வேண்டும்.

2 அவ்வாறு கவனத்திற் கொள்ளப்பட்டதன் பின்னர் இடைப்பாதுகாப்புக் கட்டளையொன்றை பிறப்பிப்பதற்கு போதியளவு விடயங்கள் இருப்பின், நீதிமன்றம் மிக விரைவாக இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்க வேண்டும்.

3 இல்லத்து வன்செயல்கள் நடைபெறுவதை தடுக்கும் அவசரத் தேவைகள், பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேவைகள் ஆகியவைகளை கருத்திற் கொண்டு இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்குவதற்கு போதுமான காரணிகள் இருப்பின் நீதிமன்றம் மிக விரைவாக பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்க வேண்டும்.

4 இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்றை விடுக்கவேண்டிய அவசியமில்லை என நீதிமன்றம் கருதும் சந்தர்ப்பத்தில், மனுவை ஏற்றுக் கொண்ட தினத்திலிருந்து 14 தினங்களுக்குள் வழக்கை விசாரனை செய்வதற்குரிய திகதியை நிர்ணயிக்க வேண்டும்.

5 பாதுகாப்புக் கட்டளையொன்றை ஏன் விடுக்கக் கூடாது என்பதற்கு காரணம் காட்டும்படி பிரதிவாதிக்கு அறிவித்தல் வழங்க வேண்டும். இதனுடன் இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்றின் பிரதியையும் இணைத்தல் வேண்டும்.


## (1) இடைக்கால கட்டளையொன்றை பிறப்பித்ததன் பின்னர் நீதிமன்றம் பின்பற்ற வேண்டிய செயன்முறைகள் என்ன?

1. அவ்வாறு இடைக்கால கட்டளையொன்றை பிறப்பித்ததன் பின்னர் உடனடியாக அதைப் பற்றிய அறிவித்தலை பிரதிவாதிக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும்.

2. வழக்கை விசாரனைக்கு எடுத்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் துன்புறுத்தலுக்கு ஆளானவருக்காக ஏன் பாதுகாப்புக் கட்டளையொன்றை பிறப்பிக்க கூடாது என்பதைப் பற்றிய காரணிகளை தெரிவிக்கும்படி பிரதிவாதிக்கு அறிவித்தல் வழங்க வேண்டும்.



3. பிஸ்கால் (***Fiscal***) அல்லது வேறு யாராவது அரச அதிகாரி ஒருவர் உரிய அக்கறையுடன் கடமையை நிறைவேற்றிய பின்னரும், மேற்கூறிய அறிவித்தலை பிரதிவாதிக்கு பெற்றுக்கொடுக்க இயலாது போயிருந்தால், பிரதிவாதி பொதுவாக வாழுமிடத்தில் நன்றாக தெரியும் ஒரு இடத்தில் அந்த அறிவித்தலை ஒட்ட வேண்டும். அந்நடவடிக்கை அறிவித்தலை ஒப்படைத்ததாகக் கருதப்படும்.



இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.

4. பிரதிவாதி அல்லது சாட்சியமளிப்பதற்காக துன்புறுத்தலுக்கு ஆளானவரினால் கேட்டுக் கொள்ளப்பட்ட யாராவது சாட்சி ஒருவர் பிரசன்னமாக வேண்டுமெனவும் ஆவணமொன்று சமர்பிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தக்கூடிய அழைப்பாணை உட்பட மற்றும் நிறைவேற்று அதிகாரம் பொருந்திய கட்டளைகளை நீதிமன்றம் வழங்க முடியும்.

5. சமூகசேவையாளர் அல்லது குடும்ப ஆலோசகர் ஒருவரிடம் வழக்கின் கட்சிக்காரர்களை அனுப்புவதன் மூலம் அவர்களுக்கு நன்மை பயக்குமென நீதிமன்றம் திருப்தியுறும் சந்தர்ப்பத்தில் அவ்வாறான கட்டளையொன்றை பிறப்பித்தல் அல்லது ஆலோசனைக் கூட்டங்களுக்கு கட்சிக்காரர்களை பங்குபற்ற வைப்பதற்குரிய கட்டளையை பிறப்பிக்க வேண்டும்.

6. துன்புறுத்தலுக்கு ஆளாகும் நபரின் பாதுகாப்பை உறுதி செய்யும் முகமாக பொதுவாக தேவைப்படும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு நீதிமன்றம் செயற்பட வேண்டும். இதற்காக பிரதிவாதியினால் நீதிமன்ற கட்டளைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்து அறிக்கையொன்றை நீதிமன்றுக்கு சமர்ப்பிப்பதற்காக சமூக சேவையாளர் ஒருவருக்கு, குடும்ப ஆலோசகர் ஒருவருக்கு, நன்னடத்தை அதிகாரி ஒருவருக்கு, குடும்பநல சுகாதார சேவையாளர் ஒருவருக்கு சிறுவர் உரிமைகளை மேம்படுத்தும் அதிகாரி ஒருவருக்கு நீதிமன்றம் கட்டளை இட வேண்டும்.

## இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்றை பிறப்பிப்பதன் முக்கியத்துவம் என்ன?

இது பாதுகாப்பிற்காக பிறப்பிக்கப்படும் உடனடித் தீர்வாகும். பாதுகாப்புக் கட்டளையொன்றை பிறப்பிக்கும் வரை அல்லது விசாரணை முடியும் வரை பிரதிவாதியினால் செய்யப்படும் இல்லத்து வன்செயல்களிலிருந்து துன்புறுத்தலுக்கு ஆளான நபரை பாதுகாப்பது இதன் நோக்கமாகும். பிரதிவாதிக் கட்சிக்காரருக்கு செவிமடுக்காமலும் இந்தக் கட்டளையை பிறப்பிக்கலாம். அவ்வாறே துன்புறுத்தலுக்கு ஆளானவரிடம் அல்லது அக்கட்சிக்காரரின் சாட்சிகளிடம் கேட்காமலும் கூட இக்கட்டளை இடலாம்.



## இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்று முடிவுறும் சந்தர்ப்பங்கள் யாவை?

- வழக்கின் இறுதியில் பாதுகாப்புக் கட்டளையொன்று பிறப்பிக்கும் சந்தர்ப்பத்தில்
- வழக்கின் இறுதியில் பாதுகாப்புக் கட்டளையொன்று பிறப்பிக்க அவசியமில்லையென நீதிமன்றம் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில்
- வழக்கு விசாரணையின் போது பாதுகாப்புக் கட்டளை நீக்கப்படும் சந்தர்ப்பத்தில்

இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.



## இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்று பிறப்பித்ததன் பின்னர் யாருக்கு அதன் பிரதிகள் ஒப்படைக்க வேண்டும்?



- கட்டளையை பிரதிவாதியிடம் ஒப்படைக்க வேண்டும்.
- கட்டளையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று துன்புறுத்தலுக்கு ஆளானவருக்கு
- துன்புறுத்தலுக்கு ஆளான நபருக்காக முன்வரும் மனுதாரருக்கு
- பிரதிவாதி மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளானவர் வாழும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

## எவ்வளவு கால எல்லைக்கு பாதுகாப்புக் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட முடியும்.

12 மாதத்திற்கு அதாவது 1 வருட கால எல்லைக்கு


பாதுகாப்புக் கட்டளையொன்று தொடர்ந்து செயற்படுத்தப்பட வேண்டுமெனும் அவசியம் கிடையாது. பிரதிவாதி வன்செயல்களில் ஈடுபடவில்லையென நீதிமன்றம் திருப்தி அடைந்த சந்தர்ப்பத்தில் இப்பாதுகாப்புக் கட்டளையை நீக்குவதன் மூலம் துன்புறுத்தலுக்கு ஆளான கட்சிக்காரருக்கும் துன்புறுத்தலை மேற்கொண்டவருக்கும் ஒற்றுமைப்பட முடியும்.

## பாதுகாப்புக் கட்டளை பிறப்பிக்கப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?

துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும், இல்லத்து வன்செயல்களை தடுப்பதற்காகவும் இங்கு கூறப்பட்ட கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டியது அவசியமென நீதிமன்றம் திருப்தியுறுமானால் இங்கு கூறப்பட்ட கட்டளை பிறப்பிக்கப்படுகின்றது.

## பாதுகாப்புக் கட்டளையொன்று பிறப்பிக்கப்படுவது பற்றிய மனுவை விசாரணை செய்யும் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் என்ன?

- மனு மீதான விசாரணை நடைபெறும் தினத்தில் பிரதிவாதி நீதிமன்றுக்கு வருகை தரும் சமயத்தில் மனு மீதான காரணங்கள் பற்றி விசாரனையொன்று நடத்த வேண்டும்.
- ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சி, சத்தியக் கடதாசி (Affidavit) மற்றும் வாய்மூல சாட்சி மூலம் மனு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.
- விசாரணையின் பின்னர் ஏதாவதொரு இல்லத்து வன்செயல் நடைபெறுதலை தடுத்தல், துன்புறுத்தலுக்கு ஆளானவருக்கு பாதுகாப்பு வழங்குதல் எனும் விடயங்களை கவனத்திற் கொண்டு பாதுகாப்புக் கட்டளையொன்றை பிறப்பிக்க வேண்டுமென நீதிமன்றம் கருதுவதாயின், பாதுகாப்புக் கட்டளையொன்றை பிறப்பிக்க வேண்டும்.



இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.

- பிரதிவாதி உரிய தினத்தன்று நீதிமன்றில் பிரசன்னமாகி வன்செயல் புரிந்ததை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட, பாதுகாப்புக் கட்டளையொன்றை பிறப்பிப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்காத சந்தர்ப்பத்தில், பாதுகாப்புக் கட்டளையொன்றை பிறப்பிக்க முடியும்.
- வழக்கு விசாரணைக்காக உரிய தினத்தன்று பிரதிவாதி நீதிமன்றுக்கு சமூகமளிக்காத விடத்து, பிரதிவாதிக்கு அறிவித்தல் ஒப்படைக்கப்பட்டுள்ளதென நீதிமன்றம் திருப்தியுறும் சந்தர்ப்பத்தில், பிரதிவாதியின்றியே பாதுகாப்புக் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட வேண்டியுள்ளதா என்பதை தீர்மானிக்க வேண்டும்.
- பிரதிவாதியின்றி நடைபெறும் ஒருதலைப்பட்ச விசாரணையில் நீதிமன்றினால் ஏறகனவே பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சி, சத்தியக் கடதாசி ***(Affidavit)*** அல்லது வாய்மொழி சாட்சி மூலமான மனு ஆகியவைகள் பற்றி கவனத்திற் கொண்டு, பாதுகாப்புக் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட வேண்டுமென கருதுவதாயின், பாதுகாப்புக் கட்டளையொன்றை பிறப்பிக்க வேண்டும்.

## இல்லத்து வன்செயல்களை தடுக்கும் சட்டத்தின் கீழ் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பாதுகாப்புக் கட்டளைக்கு எதிராக மேல்விசாரனை மனுவொன்றை எந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கலாம்?



அறிவித்தல் கிடைத்து
பிரதிவாதி நீதிமன்றத்துக்கு வருகை
தந்துள்ள சந்தர்ப்பத்தில் மனுவை விசாரித்து,
இறுதியில் விடுக்கப்படும் பாதுகாப்புக் கட்டளைக்கும்,
அறிவித்தலை ஏற்றுக்கொண்டு, பிரதிவாதி நீதிமன்றுக்கு வருகை
தராததால் ஒருதலைப்பட்சமாக வழக்கை விசாரித்து, பாதுகாப்புக்
கட்டளையொன்றை பிறப்பித்தல் எனும், இரு சந்தர்ப்பங்களிலும்,
ஏதாவதொரு முறையில் திருப்தியடையாத கட்சிக்காரருக்கு மாகாண ரீதியாக
அமைந்துள்ள மேல் நீதிமன்றத்திற்கு மேல் மனுவொன்றை தாக்கல் செய்ய
முடியும்.

இதற்காக தீர்ப்பு வழங்கிய தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் சட்டத்தைப்
பற்றிய அல்லது சம்பவத்தைப் பற்றிய ஏதும் பிழை இருக்குமானால் அது
தொடர்பாக மேன்முறையீட்டு விண்ணப்பமொன்றை மேல் முறையீட்டு
நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இங்கு விசேடமாக மனதிலிருத்திக் கொள்ள வேண்டிய விடயம்
யாதெனில் அறிக்கையிட வேண்டிய உரிய காரணிகளின் மீது
மேன்முறையீட்டு நீதிமன்றம் வேறு கட்டளையொன்றை
பிறப்பித்தாலே ஒழிய <u>மேன்முறையீட்டு மனுவொன்றை
சமர்ப்பித்த காரணத்தினால் பாதுகாப்புக்
கட்டளையொன்று நிறுத்தப்படக்
கூடாது என்பதாகும்.</u>

இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.



**பிரதிவாதி சட்டத்தரணி ஒருவரின் மூலம் தோன்றாத சந்தர்ப்பத்தில் துன்புறுத்தலுக்கு ஆளானவரிடம் சாட்சி விசாரணை செய்வதற்கு பிரதிவாதிக்கு உரிமையுண்டா?**


**இல்லை**

பிரதிவாதி துன்புறுத்தலுக்கு ஆளானவரிடமும் சாட்சிகளிடமும் சாட்சியங்களை விசாரணை செய்யக் கூடாது என துன்புறுத்தலுக்கு ஆளானவர் வேண்டுகோள் விடுக்கலாம். அவ்வாறே நீதிமன்றம் தனது உத்தரவின் மூலமும் அவ்வாறு கட்டளையிட முடியும். பிரதிவாதியின் கேள்வியின் மூலம் பயம் அல்லது அசௌகரிய நிலை துன்புறுத்தலுக்கு ஆளானவருக்கு ஏற்படாமல் இருப்பதற்காகவே இவ்வாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனினும், நீதிமன்றம் பிரதிவாதியின் கேள்விகளை நீதிமன்றத்திற்கு கூறுமாறு கட்டளையிட்டு, அக்கேள்விகளை துன்புறுத்தலுக்கு ஆளான கட்சிக்காரருக்கு சமர்ப்பிக்க நீதிமன்றுக்கு உரிமையுண்டு

**இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்றை அல்லது பாதுகாப்புக் கட்டளையொன்றை விடுக்கும்போது அதன் கீழ் ஏதாவது தடையுத்தரவொன்றையோ அல்லது வேறு நிபந்தனைகளையோ விதிக்க இயலுமா?**

**ஆம்**

துன்புறுத்தலுக்கு ஆளானவரினால் அல்லது அவர் சார்பாக வேறு யாராவது ஒருவரின் அல்லது வேறு யாராவது முக்கிய சாட்சி ஒருவரின் சத்தியப் பிரமாணத்தின் பின்னர் வழங்கப்படும் சாட்சியில் நீதிமன்றம் திருப்தியுறுமானால், கீழ் குறிப்பிடப்படும் செயல்களைச் செய்வதிலிருந்து பிரதிவாதியைத் தடுப்பதற்கு ஏதாவது தடையுத்தரவொன்றையோ அல்லது நிபந்தனையொன்றையோ உட்படுத்த இயலும்.






இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.

## 11 வது பிரிவு

### தடையுத்தரவுகளும் நிபந்தனைகளும்

- அ) சேர்ந்து வாழும் இடத்திற்குள் புகுவதையும், வசிப்பதையும் தடைசெய்தல்.
- ஆ) தான் வாழுமிடத்திற்கு, தொழில் செய்யுமிடத்திற்கு அல்லது பிள்ளையொன்றின் பாடசாலைக்கு உட்செல்லலைத் தடைசெய்தல்.
- இ) தற்காலிகமாக தங்கியிருக்குமிடத்திற்கு உட்செல்லலைத் தடைசெய்தல்.
- ஈ) மேற்கூறப்பட்ட ஒன்றாக வாழ்ந்த இடத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்குட் செல்லல், தங்கியிருத்தல் ஆகிய செயற்பாடுகளைத் தடைசெய்தல்.
- உ) ஒன்றாக வாழுகின்ற வீட்டில் குடியிருப்பதைத் தடைசெய்தல்.
- ஊ) துன்புறுத்தலுக்கு ஆளானவரின் பிள்ளையொன்றுடன் தொடர்பு வைத்துக் கொள்வதை தடைசெய்தல் (பிள்ளையுடன் தொடர்பு வைத்துக் கொள்ளல் பிள்ளைக்கு நன்மை பயக்குமென நீதிமன்றம் திருப்தியுறும் சந்தர்ப்பத்தில், நீதிமன்றம் கூறும் நிபந்தனைகளை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தை தவிர்ந்த மற்ற சந்தர்ப்பங்களில்)
- எ) துன்புறுத்தலுக்கு ஆளானவரும் பிரதிவாதியும் வழக்கமாக ஒன்றாக பாவிக்கும் அசைவற்ற (உதா: காணி, வீடு) மற்றும் அசையும் (உதா: வாகனம்) சொத்துக்களைப் பிரயோசனப்படுத்தலை தடைசெய்தல், அவற்றிற்குட் செல்லலைத் தடைசெய்தல்.
- ஏ) துன்புறுத்தலுக்கு ஆளானவருக்கு உதவும் உறவினர் ,நண்பர், சமூகசேவையாளர், வைத்தியர் அல்லது வேறு யாராவது ஒருவருக்கு எதிராக வன்செயல் புரிதல்.
- ஐ) தொந்தரவு ஏற்படக்கூடியவாறு துன்புறுத்தலுக்கு ஆளானவரை பின்தொடர்தல்.



- ஒ) துன்புறுத்தலுக்கு ஆளானவர் அல்லது வேறு ஒருவரின் பாதுகாப்பிற்கு, உடல்நலத்திற்கு அல்லது நன்மைக்கு கேடு விளைவிக்கும் வகையில் நீதிமன்றத்தினால் உறுதியாகக் காட்டப்பட்டுள்ள வேறு செயற்பாடொன்றில் ஈடுபடுதல்.
- ஓ) துன்புறுத்தலுக்கு ஆளானவரை அநாதரவான நிலைக்கு இட்டுச் செல்லக் கூடியவாறு திருமண வீட்டை தனதாக்கிக் கொள்ளல், விற்பனை செய்தல் மற்றவர்களுக்கு உரிமையாக்குதல் அல்லது அவர்கள் மீது பாரம் ஒன்றை சுமத்தும் முறையில் செயற்படுதல்.

இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.



பாதுகாப்புக் கட்டளையொன்றில், இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்றில் அ விலிருந்து ஓ வரையான பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு தடையொன்றை விதிக்கும்போது நீதிமன்றம் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?

- துன்புறுத்தலுக்கு ஆளானவரின் அல்லது துன்புறுத்தலுக்கு ஆளானவரின் பிள்ளைகளின் அல்லது பிரதிவாதிக்கு பிள்ளைகள் இருப்பின் அப்பிள்ளைகளுக்கு தங்குமிட வசதிகளை அளிக்கவேண்டிய தேவையை நீதிமன்றம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளும்.

- அவ்வாறே தடைவிதித்தலுக்குரிய நிபந்தனைகளை சேர்த்துக் கொள்வதினால் பிரதிவாதிக்கு அல்லது வேறு ஒருவருக்கு ஏற்படக் கூடிய கஷ்டங்கள் மற்றும் துன்பங்கள் ஆகியவைகள் நீதிமன்றம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளும்.



பாதுகாப்புக் கட்டளையை விடுக்கும் போது துன்புறுத்தலுக்கு ஆளானவரின் பாதுகாப்பு. நலன்புரி மற்றும் உடல் நலம் ஆகியவைகளை உறுதிப்படுத்துவதற்காக வழக்குமன்றத்தினால் விடுக்கக் கூடிய வேறு கட்டளைகள் யாவை?

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 11வது பிரிவில் அ - ஓ வரையுள்ள பிரிவுகளில் காட்டியுள்ளவாறு தடையுத்தரவுக்கு மேலதிகமாக நீதிமன்றமொன்றினால் பின்வரும் கட்டளைகள் விடுக்க முடியும். இங்கு துன்புறுத்தலுக்கு ஆளானவர் அல்லது யாராவது சாட்சி ஒருவர் அல்லது சத்தியக் கடதாசியின் ***(Affidavit)*** மேல் வழங்கும் சாட்சியைப் பற்றி நீதிமன்றம் திருப்தியுறும் சந்தர்ப்பத்தில், நீதிமன்றம் பின்வரும் கட்டளைகளை பிறப்பிக்க முடியும்.

- அ) பிரதிவாதியிடம் உள்ள ஏதாவது ஆயுதத்தை பொலீஸ் கைப்பற்ற வேண்டுமென கட்டளையிடுதல்.
- ஆ) துன்புறுத்தலுக்கு ஆளானவரின் மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளானவருக்கு பிள்ளைகள் இருப்பின் அப்பிள்ளைகளின் தனிப்பட்ட சொத்துக்களை ஒன்று சேர்ப்பதற்கு உதவுவதற்காக பொலீஸ் அவ்விடத்திற்கு செல்ல வேண்டுமென கட்டளையிடுதல்.
- இ) வழக்கிற்குரிய துன்புறுத்தலுக்கு ஆளானவர் அல்லது பிரதிவாதி சார்பாக ஏற்பாடு செய்யப்படுகின்ற ஆலோசனை செயலமர்வுகள், உளவியல் சிகிச்சை நிலையம் அல்லது வேறு புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆகியவைகளில் பங்குபற்ற வேண்டுமென கட்டளையிடுதல்.



- ஈ) துன்புறுத்தலுக்கு ஆளான ஒருவர் தங்குமிட வசதி கேட்பாராயின் தற்காலிக தங்குமிடவசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென நியமித்தலும், தேவைக்கேற்ப தங்குமிடத்தைப் பற்றிய தகவல்கள், வேறு இதர விபரங்கள் ஆகியவைகள் இரகசியமாக வைக்கப்பட வேண்டுமென கட்டளையிடல்.

- உ) சமூகசேவையாளர் ஒருவர், குடும்பநல ஆலோசகர், நன்னடத்தை அதிகாரி, குடும்ப சுகாதார உத்தியோகத்தர் ஒருவர் துன்புறுத்தலுக்கு ஆளானவருக்கும் பிரதிவாதிக்கும் இடையில் உள்ள பாதுகாப்புக் கட்டளையை மேற்பார்வை செய்து 03 மாதத்திற்கு ஒரு முறை நீதிமன்றத்திற்கு அறிக்கையொன்றை சமாப்பிக்க பணிப்புரை வழங்க வேண்டும்.

- ஊ) உணவு வழங்குவதற்கு கடமைப்பட்டுள்ள ஒருவருக்கு வாழ்வதற்குரிய உடனடி நிதியுதவிகளை வழங்க வேண்டுமென பிரதிவாதிக்கு கட்டளையிட முடியும்.

- எ) பாதுகாப்புக் கட்டளை விடுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட காலத்தினுள், துன்புறுத்தலுக்கு ஆளானவர் ஏதாவது ஒரு இடத்தில் தங்கியிருக்கும்போது துன்புறுத்தலுக்கு ஆளானவர் வாழும் வீட்டிற்கு பிரதிவாதி செல்வதற்கு தடை விதித்திருந்த போதிலும், சீவனாம்சக் கொடுப்பனவு வழங்கல், வசதிகள் பெற்றுக் கொடுத்தல் ஆகியவைகளை அவர் நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு நிதிக் கொடுப்பனவு, வசதிகள் பெற்றுக் கொடுத்தல் ஆகியவைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென விதிக்கப்பட்ட கட்டளையொன்றை நீதிமன்றம் உரிய பரிசீலனையின் பின்னர் விதிக்க வேண்டும்.

- மேற்குறிப்பிட்ட பந்திக்கேற்ப விதிக்கப்பட்ட தொகையை பிரதிவாதி செலுத்தாவிட்டால் அத்தொகையை அல்லது அதன் ஒரு பகுதியை நேரடியாக துன்புறுத்தலுக்கு ஆளானவருக்கு செலுத்தும்படி பிரதிவாதியின் தொழில் தருனருக்கு கட்டளையிட முடியும்.



இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.



துன்புறுத்தலுக்கு ஆளானவருக்கு பிரதிவாதி நிதியுதவி செய்ய வேண்டுமென விதிக்கப்பட்ட கட்டளை சீவனாம்ச வழக்கொன்றை தாக்கல் செய்வற்கு உள்ள உரிமைக்கு தடையாகுமா?

இல்லை

பாதுகாப்புக் கட்டளையொன்றில் விடுக்கும் கட்டளையொன்றின் மூலம் 1999ம் ஆண்டின் 37ம் இலக்க சீவனாம்ச கட்டளைச் சட்டத்தின் கீழ் யாராவது ஒரு கட்சிக்காரர் வழக்கொன்றைத் தாக்கல் செய்வதன் மூலம் சீவனாம்சத்தை பெற்றுக்கொள்ளவதற்கு உள்ள உரிமைக்கு ஒரு பாதிப்பும் ஏற்படாது.

பாதுகாப்புக் கட்டளையொன்றை விடுத்ததன் பின்னர் அதில் ஏதாவது மாற்றம் அல்லது திருத்தம் செய்வதற்கு இடம் கிடைக்குமா?

அதற்கு,

- துன்புறுத்தலுக்கு ஆளானவர் அல்லது பிரதிவாதி வேண்டுகோள் விடுக்க வேண்டும்.
- அக்கட்டளையை மாற்றுவதற்கு, சிறு மாற்றங்கள் செய்வதற்கு, விரிவாக்குவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு காரணங்கள் நிகழ்ந்துள்ளதென நீதிமன்றம் திருப்தியுற வேண்டும்.
- நீதிமன்றம் பாதுகாப்புக் கட்டளையொன்றை மாற்றும் போது கட்டாயமாக கட்சிக்காரர்கள் இருவருக்கும் செவிமடுக்க வேண்டும்.
- துன்புறுத்தலுக்கு ஆளானவர் இவ்வாறான வேண்டுகோள் விடுத்துள்ள சந்தர்ப்பத்தில் அதை, மற்றவர்களின் தலையீடின்றியும், தன்னுடைய சுயவிருப்பத்தின பேரிலும், வேறு யாருடைய தூண்டுதலும் இல்லாமல் செய்துள்ளார் என நீதிமன்றம் திருப்தியுற வேண்டும்.
- இச்சட்டத்தின் கீழ் பாதுகாப்புக் கட்டளையொன்றை பிறப்பிப்பதன் மூலம் பிரதிவாதியின் மீது குற்றப் பொறுப்பொன்று ஏற்படுத்துமா?

இல்லை

இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்று அல்லது பாதுகாப்புக் கட்டளையொன்று பிறப்பித்தல் என்பது சிவில் செயற்பாடொன்றாகும். இந்நடவடிக்கையை பெற்றுத் தருவது குற்றவாளியென நிரூபிக்கப்படாமலேயாகும். உதாரணமாக பிரதிவாதிக் கட்சிக்காரருக்கு செவிமடுக்காமல் இடைக்கால கட்டளையொன்றை விடுக்க நீதிமன்றத்திற்கு இயலாது. இதனால் பிர்திவாதியை குற்றவாளியாக்கி சிறைக்கு அனுப்ப எந்த விதத்திலும் நீதிமன்றத்திற்கு இயலாது. இதனால் பிரதிவாதியை குற்றவாளியாக்கி சிறைக்கு அனுப்புதல் எந்த விதத்திலும் இச்சட்டத்தின் மூலம் நடைபெறவில்லை.

இச்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள குற்றவியல் கோவையின் 16வது அத்தியாயத்திலும் மற்றும் வேறு பிரிவுகளிலும் காட்டப்பட்டுள்ளவாறு உடலுக்கு எதிராக செய்யப்படுகின்ற குற்றமொன்று சம்பந்தமாக குற்றவியல் வழக்கொன்று தாக்கல் செய்வதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் தடையாய் உள்ளனவா?

**ஒருபோதும் கிடையாது**

உதாரணமாக இல்லத்து வன்செயலின் மூலம் ஒருவருடைய மரணம் சம்பவித்தால் குற்றவியல் சட்டத்தின் 291ம் பிரிவின் கீழ் கொலைக் குற்றத்திற்கு உள்ளாக்கி, கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, வழக்கு விசாரித்து, குற்றத்திற்குரிய குற்றவாளியாக்கலாம்.

இல்லத்து வன்செயல்கள் சட்டத்தின் மூலம் பிரதிவாதிக்கு தண்டனை வழங்கப்படுகின்றதா?

**இல்லை**

எனினும் இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்று அல்லது பாதுகாப்புக் கட்டளையொன்று பிரதிவாதியின் மீது விதித்துள்ள சந்தர்ப்பத்தில், அக்கட்டளைக்கேற்ப செயற்பட தவறும் சந்தர்ப்பத்தில் பிரதிவாதி குற்றமொன்றை இழைத்த குற்றவாளியாகக் கருதப்படுகிறார்.

இடைக்கால பாதுகாப்புக் கட்டளையொன்று அல்லது பாதுகாப்புக் கட்டளையொன்றை மீறுதல் பற்றி பிரதிவாதி ஒருவர் குற்றவாளியாகும் சந்தர்ப்பத்தில், மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தின் மூலம் விதிக்கக் கூடிய தண்டனைகள் யாவை?

நீதிமன்றக் கட்டளையொன்றை புறக்கணிப்பதென்பது நீதிமன்றத்தை அவமதிப்பதாகும். இதனால் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் பிரதிவாதிக்கு பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாத அபராதமொன்றை விதிக்கவோ அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத கால எல்லைக்கு சிறைப்படுத்தவோ இயலும்.

அவ்வாறு சிறைப்படுத்தல் பாரமான வேலைகளுடனோ அல்ல இலேசான வேலைகளுடனோ வழங்கப்படலாம் என்பதோடு, அபராதம் மற்றும் சிறைப்படுத்தல் ஆகிய இரண்டு தண்டனைகளையும் ஒன்றாக வழங்குவதற்கும் அதிகாரம் உண்டு.





மனுதாரரின் அல்லது துன்புறுத்தலுக்கு ஆளானவரின் பெயர், ஊர் மற்றும் ஆள்அடையாளம் தெரியக்கூடியவாறு ஏதாவது விடயங்களை பிரசுரித்தல் அல்லது அச்சடித்தல் செய்ய முடியுமா?

**முடியாது.**



மனுதாரரின் அல்லது பிரதிவாதியின் பெயர், ஊர் வெளிப்படக் கூடியவாறு யாராவது ஒருவர் ஏதாவதொன்றை பிரசுரித்தால் அல்லது வெளியிட்டால் இரண்டு வருடங்கள் வரை சிறைப்படுத்த முடியும். எனினும் மேல் நீதிமன்றத்தின் அல்லது மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றை பிரசுரிப்பது குற்றமன்று.

இல்லத்து வன்செயல் சட்டத்தின் மூலம் இவ்வாறான ஏற்பாடுகள் செய்திருப்பது குடும்ப தகராறுகளிலுள்ள இரகசியங்களை பேணுவதற்காகும்.





இல்லத்து வன்செயல்கள் தடுக்கப்பட வேண்டிய ஒரு துன்புறுத்தலாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்